## 1.1 அபிப்பிராயம்

லங்கா ஹொஸ்பிடல் டயக்நோஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் (''கம்பனி'') 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2018 திசெம்பா 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் அதன் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் கணக்காய்வு கணிப்பீட்டின் படி பெற வேண்டிய வட்டி ரூபா. 6,583,014 ஆக இருந்தது. ஆனால் பேரேட்டின் படி இது ரூபா. | சரி செய்தல் பின்னர் செய்யப்பட்டுள்ளது. | பெற வேண்டிய வட்டி பொருத்தமான காலத்தை கவனத்தில் கொண்டு |

| | | | |
|---|---|---|---|
| 5,534,580 ஆக இருந்தது. எனவே, ரூபா. 1,048,434 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | | | கணிப்பிடப்பட வேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா. | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் ரூபா. | வேறுபாடு ரூபா. | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| சீஷெல்ஸ் ஆய்வுகூடத்தில் இருப்பு | 2,595,182 | 4,264,448 | 1,669,266 | கம்பனி முறைமையை அபிவிருத்தி செய்வதற்கான செய்முறையில் உள்ளது. | நிதி கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள தொகைகள் தொடர்புடைய பதிவுகளுடன் சீரமைக்கப்பட வேண்டும். |

### 1.6 ஐரீ பொதுவான கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் நிறுவனத்தினுடைய தகவல் தொழில்நுட்ப முறைமை இருப்புக்களின் வயது பகுப்பாய்வை வழங்குவதனை எளிதாக்கவில்லை. | தற்போதுள்ள எஸ்ஆர்பி முறைமை வயது பகுப்பாய்வு அறிக்கையை உருவாக்குவதனை எளிதாக்கவில்லை. மற்றும் கம்பனி எல்.எச்.டி தகவல் தொழில்நுட்ப துறையின் உதவியுடன் முறைமையில் அந்த அம்சத்தை அபிவிருத்தி செய்வதற்கான செய்முறையில் உள்ளது. | இது முறைமையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா. 254,798,395 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 171,871,852 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா. 82,926,543 தொகையான முன்னேற்றமொன்று அல்லது 48.25 சதவீதமான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.2 விகிதப் பகுப்பாய்வு

| | 2018 | 2017 |
|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் | 3.60 தடவைகள் | 3.12 தடவைகள் |
| விரைவு சொத்து விகிதம் | 3.24 தடவைகள் | 2.94 தடவைகள் |
| மொத்த இலாப விகிதம் | 52.43% | 47.11% |
| ஈடுபடுத்திய மூலதனம் மீதான திரும்பல் | 32.62% | 26.04% |
| இணைவு விகிதம் | - | - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு நடைமுறையாக, கம்பனி மருத்துவரின் கருத்துக்களின் அடிப்படையில் ஆய்வுகூட சோதனைகளுக்காக காலாவதியான மருந்துகளை பயன்படுத்துகிறது. | உலகெங்கிலும், தொழிலில் ஏற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறையாக, சில சூழ்நிலைகளில், கடுமையான மேற்பார்வையுடன் காலாவதியான சோதனைப்பொருட்களை ஆய்வுகூடங்கள் பயன்படுத்த அனுமதிக்கப்படும். | தரத்தினை பேணும் போது தொழில் நடைமுறைகள் மற்றும் விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **எல்எச்டி/18/00148/எம்எஸ்/பி297- முழுமையான தானியங்கி குருதியியல் பகுப்பாய்வு இயந்திரத்தை வழங்குதல் மற்றும் நிறுவுதல்.** மேற்கூறிய கேள்வி பத்திரம் பயோமெடிகா (பிரைவேட்) லிமிட்டட் கம்பனிக்கு வழங்கப்பட்டது. மேற்கூறிய கம்பனியின் விலைக்கேள்வி ஆவணத்தில், விலைக்கேள்வி கம்பனியின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் கையொப்பம் இடப்பட்டிருக்கப்படவில்லை. அதிகாரமளிக்கப்பட்ட நபரினால் விலை அட்டவணை மற்றும் விலைகேள்வி படிவத்தில் | பயோமெடிகா (பிரைவேட்) லிமிட்டட் கம்பனியை தொழில்நுட்ப குழு இந்த விலைகேள்விக்கான மிகக் குறைந்த விலை குறிப்பிட்ட விற்பனையாளர் மற்றும் அளவுகோல் மதிப்பீட்டிற்கு பின் தெரிவு செய்தது. கணக்காய்வாளரால் குறிப்பிடப்பட்ட காரணங்களின் அடிப்படையில் வழங்குனரின் நிராகரிப்பு கம்பனிக்கு சாத்தியமான முடிவாக இருக்காது. ஏனெனில், விலைக்கேள்வி ஆவணத்தின் | அரசாங்க பெறுகை வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | |
|---|---|
| கையெழுத்திட தவறியமை விலைகேள்வியின் செல்லுபடியில் தாக்கத்தை ஏற்படுத்தியது. பெறுகை வழிகாட்டு நெறிகள், பிரிவு 7.8 இன் படி, விலைமனுவின் செல்லுபடியில் சில தவறுகள் தாக்கத்தை ஏற்படுத்தின மற்றும் இது ஒரு பெரிய விலகலாக கருதப்படுகின்றது. விலைகேள்வி பெரிய விலகலுடன் இருந்தால், அந்த விலைகேள்வி நிராகரிக்கப்பட்டதாக அல்லது பதிலளிக்கப்படாததாக கருதப்பட வேண்டும். | அட்டைப்பக்கத்தில் வழங்குனர் கையொப்பமிட்டுள்ளார். |